**<u>சுருக்கம்</u>**

மாற்றுத் திறனாளிகள் நலன் – 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் வசிக்கும் இல்லவாசிகள் – காலணிகள் வாங்கி வழங்கும் திட்டம் – 2014–2015 ஆம் நிதியாண்டு – திட்டத்தொடராணை மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்குவது – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (நிலை) எண்.58** **நாள்: 16.09.2014**

**ஜய–ஆவணி 31, திருவள்ளுவர் ஆண்டு, 2045**

**படிக்கப்பட்டது:**

1 அரசாணை (நிலை) எண்.99, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 21.11.2013.

2 மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க.எண்.482/மஇ.நிர்.(3)/2013, நாள் 10.06.2014 மற்றும் 22.08.2014.

----

**<u>ஆணை:</u>**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் தங்கியுள்ள இல்லவாசிகளுக்கு காலணிகள் வழங்கும் திட்டத்தினை, 2013–2014 ஆம் நிதியாண்டில் தொடர்ந்து செயல்படுத்திட, திட்டத் தொடராணையும், இச்செலவினத்திற்கென ஒரு காலணியின் விலை ரூ.300/– வீதம் 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் தங்கியுள்ள 1179 இல்லவாசிகளுக்கு MCR காலணிகள் வாங்கி வழங்கிட, ரூ.3,53,700/– நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. எனினும், அலுவலக நடைமுறை நிமித்தம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யப்படாத காரணத்தினால், மேற்படி அரசாணையினை செயல்படுத்திட இயலவில்லை என, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தெரிவித்துள்ளமையால், பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணை இரத்து செய்யப்படுகிறது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்த நோயாளிகள் இல்லவாசிகளாக தங்கிப் பயனடைந்து வருவதாகவும், நடப்பு நிதியாண்டிலும் இத்திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்துவது அவசியம் என்பதால், 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் உள்ள இல்லவாசிகளுக்கும் காலணிகள் பெற்று வழங்கிட, விலைவாசி ஏற்றத்தின் காரணமாக ஒரு காலணியின் விலை ரூ.400/– வீதம் 1119 பயனாளிகளுக்கு ரூ.4,47,600/– நிதி ஒதுக்கீடு செய்து தொடராணை வழங்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

[த.பி.பா]

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை ஆய்வு செய்த அரசு, அதனை ஏற்று, 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் தங்கியுள்ள இல்லவாசிகளின் நலனை கருத்தில் கொண்டு, 2014–2015 ஆம் நிதியாண்டில் தொடர்ந்து செயல்படுத்திட, திட்டத் தொடராணையும், இச்செலவினத்திற்கென ஒரு ஜதை காலணியின் விலை ரூ.400/– வீதம் 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் தங்கியுள்ள 1119 இல்லவாசிகளுக்கு MCR காலணிகள் வாங்கி வழங்கிட, ரூ.4,47,600/–க்கு நிதி ஒப்பளிப்பு செய்தும், இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி அளித்தும் அரசு ஆணையிடுகிறது. மேலும், ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யும் போது, தற்போது நடைமுறையில் உள்ள ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகளை தவறாது பின்பற்றப்பட வேண்டும் என மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

4. மேலே பத்தி–3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்:–

**“2235–சமூக பாதுகாப்பும் நலனும் – 02–சமூக நலன் – 104–முதியோர் இயலாமையற்றோர் மற்றும் ஆதரவற்றோர் நலன் – I–திட்டத்தில் சேராதது – AI–தொழுநோய் பிச்சைக்காரர்களுக்கான மறுவாழ்வு இல்லம் – 24–பொருள்களும் வழங்கலும். (து.தொ.கு.2235–02–104–AI–2405).**

5. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற எண்.49118/நிதி(சந)/2014, நாள் 10.09.2014–ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்.**
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
அரசு மறுவாழ்வு இல்லங்கள்,
விண்ணப்பள்ளி / பரனூர் / உளுந்தூர்பேட்டை /
செல்லியம்பட்டி / மல்லவாடி / தேவியாக்குறிச்சி /
மணையேறிப்பட்டி / யா.புதுப்பட்டி / பர்கூர் / புதுக்கோட்டை.
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
இருப்பு தணிக்கை அலுவலர், சென்னை–9.

**நகல்**
நிதி (ச.ந)த் துறை, சென்னை–9.
முதன்மைச் செயலரின் தனிச் செயலாளர்,
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.